## Joint Declaration calling for the end of the famine in Jaffna, in the name of the Tamil peoples right to life.

The fourth Eelam war now rages on.

On the 20th of July 2006 the Mavil aru anicut in the Trincomalee district was closed, within six days the war started with aerial bombardment on a massive scale. The real events surrounding the Mavil aru incident have remained concealed from the majority of the general public and this has ensured that the ordinary people in the south remain in the dark as to the background to the war breaking out. Militaristic attitudes and approaches have ensured that a simple issue relating to the supply of potable water which could have easily been sorted out by application of the correct administrative procedures and interventions end in this conflagration which has already claimed thousands of innocent lives.

The number of deaths being reported has been increasing daily, these numbers also include those young people belonging to the LTTE and the armed forces. In the Northern and Eastern provinces many innocent civilians lose their lives daily. The massive aerial bombardments have resulted in large scale destruction and a massive humanitarian catastrophe. 57 girls died in a aerial bombardment carried out on Vallipunam on the Mullaitivu –Paranthan road on the 14th of August. A further large number was wounded. No one in the south is aware of the numbers of people permanently disabled. Even according to the state's Human Rights Commission the number of disappearances of civilians in the Jaffna peninsula for the month of August alone exceeds 50. This is in addition to the abductions and disappearances of Tamil civilians in the South.

With the conclusion of the second round of the Geneva Talks held on the 28th and 29th of October the military onslaught has been reinforced, 5 civilians were killed in the bombing of Thiruvai aru in the Kilinochchi area and an elderly woman patient died of shock in the bombing of the Kilinochchi hospital on the same day, to say nothing of the damage to the hospital.

Moreover the Government's persistent refusal to open the A9 highway linking the Jaffna peninsula to the outside has created an enormous humanitarian crisis. The tragic reality of the Jaffna peninsula continues to be concealed from the general public of the south. Presently 175000 families live in the Jaffna peninsula, this population of over 600000 people are facing a state of famine cut off from essential services, medication and food. 42,000 of them are internally displaced refugees, whose homes and lands have been declared as coming under the High Security Zones of the army.

The monthly requirement of rice to feed 6the population of the Jaffna peninsula is estimated at 4500MT but the total quantity of rice received in the peninsula since the 12th of Aug until the 6th of September, that is to say in over two months has been only 3624MT. The quantity of wheat flour sent has been a mere 900MT to meet a monthly requirement of 2500MT per month. Only 1875MT of sugar has been received over these two months to meet a monthly requirement of 1500MT.

As a result, in the Jaffna peninsula, the prices of these staples have sky rocketed compared to prices prevailing in the south. A kilo of Rice costs Rs.150-180, and a kilo of wheat flour is at Rs.450. A packet of powdered milk costs over 300/- while there is no infant milk or food available. A litre of coconut oil is Rs.350, a litre of petrol Rs.400 and a litre of diesel Rs.150, a litre of kerosene is over Rs.150.LP gas is no longe4r available. Public Transport has broken down due to the shortage of fuel leaving school children unable to attend school, and daily wage earners in hunger.

Since the 30th of October the Jaffna Teaching Hospital has been deprived of electricity. The fuel shortages have made it impossible to provide an uninterrupted power supply using generators. The shortage of drugs has brought its deadly results, heart patients and diabetics are unable to obtain their long term medication from the hospitals or the open market, and the monsoons have brought with them the threat of epidemics.

Now the Tamil people can either look forward to an instantaneous death in aerial bombardments or a lingering death from famine and disease. This terrifying fate faced by our brethren in the north is the result of calculated policy on the part of the State. Collective punishment of an ethnic group through denial of access to food and medicine is a war crime. The ruling elements hell bent on constructing airports and high speed access highways to them despite massive peoples opposition in the south, have no qualms about closing down the A9 and denying 600000 people in Jaffna access to food and medicine because, none of them have electorates there.

We Sinhalese, collective signatories to this declaration, have shared our lives in a multitude of social and cultural activities with our Tamil brethren over the last four years. Our conscience does not permit us to turn away from our brethren facing famine and destruction. Therefore we declare of opposition to this genocidal policies of the State towards our brethren facing famine and starvation in Jaffna. We unconditionally stand for the right of the Tamil people to a free and democratic way of life. We condemn unreservedly any attempt direct or indirect to violate this right of theirs and to repress them through war and starvation. We insist that the State and its authorities take immediate steps to resolve the urgent humanitarian crisis in Jaffna, to halt all acts of war and to take necessary steps to protect the democratic rights of the Tamil people.

Stop all acts of war against the Tamil People.

Uphold the right of the Tamil people to return to their homes and lands.

Allow the starving people of Jaffna access to food and medicine NOW.

**1. Prof. Sucharitha Gamlath**
**2. Darmasisri Banadaranayake (Film Director /Dramatist)**
**3. Ashoka Handagama (Film Director /Dramatist)**
**4. Prasanna Vithanage (Film Director /Dramatist)**
**5. Jayathilaka Bandara (Musician)**
**6. Parakrama Niriella (Film Director /Dramatist)**
**7. Lakshman Gunasekara (Journalist)**
**8. Inoka Sathyangani Keerthinanda (Film Directress)**
**9. Ajith Samaranayaka (Journalist)**
**10. Thilina Weerasinghe (Freelance writer)**
**11. Sudath Mahadivulawewa (Film Director)**
**12. Sathyajith Maitipe (Film Director)**
**13. Vimukthi Jayasundara (Film Director)**
**14. Malcolm Machado (Actor)**
**15. Anoma Rajakaruna (Film Director/Writer)**
**16. Sydney Marcus Dias (Writer)**
**17. Ranjan Ramanayake (Actor/ Film Director)**
**18. Saumya Liyanage (Actor)**
**19. W.Jayasiri (Actor)**
**20. Sunil Perera (Musician)**
**21. K.W.Janaranjana (Journalist)**
**22. Jayasiri Jayasekara (Journalist)**
**23. Thimbiriyagama Banadara (Journalist)**
**24. Sudath Gamini Bandara (Writer)**

# தமிழ் மக்களின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்தி யாழ்ப்பாணத்தில் நிலவும் பஞ்சத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்கான பிரகடனம்

நான்காம் கட்ட ஈழப்போர் இப்போது ஆரம்பித்துள்ளது.

20.07.2006 திருகோணமலை மாவட்டத்தில் மாவிலாறு அனைக்கட்டு மூடப்பட்டது. ஆறு நாட்களுக்குள் வான்வெளித் தாக்குதல் நடாத்தப்பட்டு யுத்தம் ஆரம்பமாகியது. அந்த யுத்தமானது பல நூற்றுக் கணக்கான உயிர்களை பலி எடுத்துள்ளது. மாவிலாறு மற்றும் அது சம்பந்தமான உண்மை மக்களுக்கு மறைக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக யுத்தத்தின் பின்னனி காரணங்கள் அறியாமையின் காரணமாக தெற்கில் பிழையான சிந்தனை உணர்வே காணப்படுகின்றது. சாதாரன நிர்வாக செயற்றிட்டத்திற்கூடாக தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய மாவிலாறு பிரச்சினை அதாவது குடிநீர் பிரச்சினை நூற்றுக்கணக்கான உயிர்களை பலி எடுக்கும் பாரிய யுத்தம் தொடரும் அளவிற்கு விரிவடைந்ததற்கு அடிப்படை காரணம் பிழையான அனுகுமுறையும் யுத்த சிந்தனையுமாகும்.

தற்போது தினமும் மரணிப்போரின் தொகை அதிகரித்துச் செல்கின்றது. அதன் மத்தியில் L.T.T.E அங்கத்தவர்களும் அரச இராணுவத்தினரும் கொள்ளப்படுவதினால் இளைஞர்களே கொள்ளப்படுகின்றனர். வடகிழக்கு பிரதேசத்தில் சாதாரண மக்களில் பலர் தினம் கொள்ளப்படுகின்றனர். பாரிய வான் வெளித் தாக்குதல் மூலம் அதிகளவான அழிவுகள் ஏற்படுத்தப்படுவதோடு மானசீக பிரச்சினை உயிர் பெற்றுள்ளது. ஆகஸ்ட் 14ம் திகதி முல்லைத்தீவு பரந்தன் வீதியில் வல்லிபுனம் சிறுவர் இல்லத்தின் மீது நடத்தப்பட்ட வான்வெளித் தாக்குதலின் காரணமாக அங்கு தங்கி இருந்த 57 சிறுமிகள் உயிரிழந்தனர். இன்னும் பலர் காயங்களுக்குள்ளாகினர். வாழ்வு முழுவதும் உடல் ஊனமுற்ற நிலைக்கு தள்ளப்பட்டோரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை தெற்கின் மக்கள் அறியமாட்டார்கள். ஆகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாண தீபகற்பத்தில் மட்டும் காணாமற் போனோரின் எண்ணிக்கை அதாவது அரச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கைப்படி 50 இற்கும் அதிகமானோர் ஆவர். அதாவது இத்தொகை தெற்கில் வெளிவரும் எண்ணிக்கைக்கு மேலதிகமாகும்.

ஒக்டோபர் மாத இறுதியில் ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தை முடிவுற்றுள்ளது. யுத்த சூழ்நிலையில் இருந்து விடுபட வேண்டிய நிலை தடம் புரண்டு மீண்டும் யுத்தத்திற்கே செல்லும் நிலை தோன்றியுள்ளது. நொவெம்பர் 2ம் திகதி கிளிநொச்சியில் திருவை ஆறு பிரதேசத்தில் வீசப்பட்ட குண்டின் காரணமாக சாதாரண மக்கள் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் பாடசாலை மாணவர்களாவர். அன்றைய தினமே கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அண்மையில் விழுந்த குண்டின் காரணமாக பெண்ணொருவர் அதிர்ச்சியினால் உயிரிழந்துள்ளார். அத்தோடு கிளிநொச்சி ஆஸ்பத்திரியும் சேதமடைந்துள்ளது.

இவை எல்லாவற்றிற்கும் அப்பால் தெற்கையும் வடக்கையும் இணைக்கும் ஏ9 பாதை மூடுவதற்கு அரசு எடுத்த தீர்மானம் மக்களின் அன்றாட பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றது. இதன் காரணமாக தற்போது யாழ்ப்பாணத்தில் தோன்றி உள்ள நிலை மிகவும் கவலைக்கிடமானதாகும். அங்கு நிழவும் உண்மைநிலை தெற்கு மக்களுக்கு மூடி மறைக்கப்பட்டுள்ளது. தற்போது யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் குடும்பங்கள் வாழ்கின்றனர். ஆறு லட்சத்திற்கு அதிகமான மக்கள் பட்டினிக்கும், தொற்று நோய்க்கும் உள்ளாகியுள்ளனர். இந்த 6 இலட்சத்தில் 42 ஆயிரம் பேர் அகதிகளும், இடம்பெயர்ந்தோருமாவர். இதற்கு காரணம் இவர்களின் பூமி இராணுவ அதி உயர் பாதுகாப்பிற்குள்ளாகியுள்ளதாகும்.

யாழ்ப்பாண மக்களின் அன்றாட உணவுத் தேவையை நிறைவு செய்ய மாதத்திற்கு 4500 மெட்ரிக் தொன் அரிசி தேவைப்படுகின்றது. ஆனால் ஆகஸ்ட் 12ம் திகதிக்கும் ஒக்டோபர் 6ம் திகதிக்கும் உட்பட்ட இரண்டு மாத காலத்திற்கு அரசால் அனுப்பப்பட்ட அரிசியின் அளவு 3624 மெட்ரிக் தொன்களாகும். மாதத்திற்கு தேவையான கோதுமை மா 2500 மெட்ரிக் தொன்களாகும். ஆனால் மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் அனுப்பப்பட்ட கோதுமை மா 900 மெட்ரிக்தொன்களாகும். மாதத்திற்கு தேவையான சீனி 1500 மெட்ரிக்தொன்களாக இருந்தபோதும் இரு மாதத்திற்கு 1875 மெட்ரிக் தொன்களே அனுப்பட்டுள்ளன.

மேலும் அங்கு பொருட்களின் விலையோ தெற்கின் விலைகளை விட பண் மடங்கு ஆகும். அரிசி கிலோ ஒன்று ரூபா 150 - 180 வரை விற்கப்படுகின்றது. போதுமை மா ஒரு கிலோவின் விலை ரூபா 450 ஆகும். பால்மா ஒன்றின் விலை ரூபா 300க்கும் அதிகமாகும். குழந்தைகளுக்கான பால்மாவோ வேறு உணவுப் பொருட்களோ சந்தைகளில் கிடைப்பது அரிதாக உள்ளது. தேங்காய் எண்ணெய் ஒரு லீட்டரின் விலை ரூபா 350 ஆகும். பெட்ரோல் லீட்டரின் விலை 400 ஆக விற்கப்படுவதோடு 1 லீட்டர் டீசலின் விலை 150 ஆக உள்ளது. 1 லீட்டர் மண்ணெண்ணெய்க்கு ரூபா 150க்கும் அதிகமாக செலவழிக்க வேண்டியுள்ளதோடு L.P எரிவாயு பெற்றுக்கொள்ள முடியாத நிலையே தோன்றியுள்ளது.

எண்ணெய்ப் பற்றாக்குறையின் காரணமாக போக்குவரத்து சேவை குறைந்துள்ளதோடு, பாடசாலைக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுகிறது. அன்றாட கூலி வேலை தேடுவோர் தொகை அதிகரித்துள்ளதோடு அவர்களை வீதியில் காணக்கூடியதாகவும் உள்ளது.

ஒக்டோபர் 30ம் திகதியில் இருந்து யாழ்ப்பாண மத்திய போதனா வைத்தியசாலையின் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. எண்ணெய் இன்மையின் காரணமாக தொடர்ச்சியாக மின் பிரப்பாக்கி இயக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. மருந்து

பற்றாக்குறைகளே மக்களை மரண பிடிக்குள் தள்ளி உள்ளது. இருதய நோய் உள்ளோர்க்கும், நீரழிவு நோய் உள்ளோரும் தொடர்ச்சியாக பாவிக்க அங்கீகரிக்கப்பட்டமருந்துகள் பொது வைத்தியசாலையிலோ, தனியார் மருந்துக் கடைகளிலோ பெற்றுக்கொள்ள முடியவில்லை. பருவ பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ள இன்றைய சூழ்நிலையில் தொற்று நோய் பரவும் அபாயமும் தோன்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சூழ் நிலையில் வான்வெளித் தாக்குதல் மூலம் உடனடி மரணம் கிடைக்கிறது. அல்லது பட்டினி. அல்லது நோய் காரணமாக காலம் தாழ்த்தப்பட்ட மரணத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவர். இன்று யாழ்ப்பாணத்து மக்கள் முகம் கொடுத்திருக்கும் அவல நிலை அரசின் திட்டமிட்ட செயல் என்றே கூறலாம். அது மட்டுமல்ல மட்டுப்படுத்தப்பட்ட உணவு, மற்றும் மருந்து பொருட்கள் மூலம் மக்களை தண்டித்து யுத்த கொள்கை மீரலாகும். தெற்கில் மக்களின் விருப்பிற்கு அப்பால் அதிவேக பாதைகளும், விமானத்தளமும் நிர்மாணிக்கப்படுகின்றது. ஆனால் வடக்கிற்கான பாதை மூடப்பட்டு உணவு மற்றும் மருந்து பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு காரணம் தெற்கின் எந்த ஒரு பராளுமன்ற உறுப்பினரினதும் தொகுதியாக யாழ்ப்பாணம் காணப்படாமையாகும்.

இப்பிரகடனத்திற்கு பொதுக் குழுவாக கையொப்பமிடும் சிங்கள மக்களாகிய நாங்கள் கடந்த நான்கு வருட காலமாக சமுக, கலாச்சார ரீதியில் தொடர்புகளை ஏற்படுத்தி வந்துள்ளோம் இதன் மூலம் வடக்கின் மக்களோடு வாழ்க்கை பகிர்ந்து கொண்டுள்ளோம் என்றே கூற வேண்டும். இந்நிலையில் பட்டினிச்சாவிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் சகோதர இனம் தொடர்பாக எமக்கு மனச் சாட்சி உண்டு. அதன் காரணமாகவே இதன் மூலம் எம் உணர்வை வெளிப்படுத்துகின்றோம். இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் பட்டிணிச் சாவை உருவாக்கியுள்ள சக்திக்கு எமது எதிர்ப்பை தெரிவிக்கின்றோம். அத்தோடு தமிழ் மக்களின் சுதந்திர ஜனநாயக வாழ்விற்கு எமது நிபந்தனை அற்ற ஆதரவை தெரிவித்துக் கொள்கின்றோம். நேரடியாகவும் மறைமுகமாகவும் வாழ்வுறிமையை இல்லாமற் செய்வதற்கும், பட்டினிக்கும், யுத்த நிலைமைக்கு உள்ளாக்கப்படுகின்றமைக்கும் எமது எதிர்ப்பை தெரிவிகின்றோம். யாழ்ப்பாணத்தில் தற்போது தோன்றி உள்ள அன்றாட தேவை நிவர்த்தி செய்ய யுத்த நடவடிக்கைகளை நிறுத்தி ஜனநாயக உரிமைகளை பாதுகாத்து அம்மக்களை காக்க வழி விடுமாறு அரச அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுகின்றோம்.

- தமிழ் மக்களுக்கு எதிராக அனைத்து யுத்த நடவடிக்கைகளையும் நிறுத்தவும்.
- அபகரிக்கப்பட்ட பூமிக்கு மீண்டும் திரும்ப வழி சமைக்கவும்.
- யாழ்ப்பாண மக்கள் தற்போது முகம் கொடுத்திருக்கும் அன்றாட பிரச்சினைக்கு உடனடி தீர்வு கொடுக்க வேண்டும்.

பேராசிரியர் சுசரித்த கம்லத்
திரைப்பட, நாட இயக்குனர் தர்மசிறி பண்டாரநாயக்க
திரைப்பட இயக்குனர் அசோக ஹந்தகம
திரைப்பட, நாட இயக்குனர் பிரசன்ன விதானகே
இசைக் கலைஞர் ஜயதிலக்க பண்டார
திரைப்பட, நாட இயக்குனர் பராக்கிரம நிரிஹெல்ல
ஊடகவியலாளர் லக்ஷ்மன் குணசேகர
திரைப்பட இயக்குனர் இனோகா சத்தியாங்கனி
எழுத்தாளர் திம்பிரியாகம பண்டார
எழுத்தாளர் திலினா வீரசிங்க
திரைப்பட இயக்குனர் சுதத் மாதிவுல்வெவ
திரைப்பட இயக்குனர் சத்தியஜித் மாஇடிபே

திரைப்பட இயக்குனர் விமுக்தி ஜயசுந்தர
திரைப்பட நடிகர் மெல்கம் மசாடோ
திரைப்பட இயக்குனர், எழுத்தாளர் அனோமா ராஜகருணா
எழுத்தாளர் சிட்னி மாக்கஸ் டயஸ்
திரைப்பட நடிகர், திரைப்பட இயக்குனர் ரன்ஜன் ராமநாயக்க
திரைப்பட நடிகர் சௌமிய லியனகே
திரைப்பட நடிகர் டபிள்யூ. ஜயசிறி
இசைக்கலைஞர் சுனில் பெரேரா
ஊடகவியலாளர் கே.டபிள்யூ.ஜனரன்ஜன
ஊடகவியலாளர் ஜயசிறி ஜயசேகர
**Ajith Samaranayaka (Journalist)**
**Sudath Gamini Bandara (Writer)**